www.tamilarangam.net

# கண்ணாட்டி பொதுவுடமை விவசாயப் பண்ணை காட்டும் பாதை

தமிழ்ப் பிரதேசங்களின் சமூக — பொருளாதார, விவசாய அபிவிருத்தியில் இளைஞர்களை நேரடியாக ஈடுபடுத்த வைக்கும் நோக்கத்தோடு 1976ம் ஆண்டு மத்திய பகுதியில் இப்பண்ணை இளைப்பாறிய ஆசிரியர் திரு. யோ. அருளப்புவின் உதவியுடன் தொடங்கப்பட்டது. 1977ம் ஆண்டு ஆகஸ்டு காலத்தின் பின் இத்திட்டம் முப்பது இளைஞர்களையும், முப்பது குடும்பங்களையும் , கொண்டு கூட்டுறவு முறையில் விரிவுபடுத்தப்பட்டது.

வட மத்திய மாகாணத்தின் கெக்கிராவ, தம்புல்ல, போன்ற பகுதிகளில் இருந்து அகதிகளாக்கப்பட்ட குடும்பங்களில் ஐந்து குடும்பங்கள் 5.10.77 அன்று முதல்முறையாகக் கொண்டு வந்து பண்ணையில் சேர்க்கப்பட்டனர். இதன் பின்பு மேலும் குடும்பங்கள் வந்தனர். சகலருக்கும் இளைஞரின் உதவியுடன் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டது.

<u>விவசாயப் பண்ணை</u>: இப்பண்ணை மொத்தமாக சுமார் 104ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது. இதில் 30ஏக்கர் நெல்வயல்களாகும். மிகுதி மேட்டு நிலமாகும். ஒரு பக்கம் குளமும், மிகுதி மூன்று பக்கங்களும் காடாகவும் அமைந்திருக்கின்றது. மருக்காரம்பளை என்று அழைக்கப்படும் இக் குளமும், பண்ணையும் மன்னார் ரோட்டில், வவுனியாவிலிருந்து இருபது மைல்களுக்கப்பால் கண்ணாட்டியில் உள்ளது. கடந்த வருடத்தில் 22 ஏக்கரில் நெல் விதைக்கப்பட்டது. நான்கு மாத நெல்லாகிய பி.ஜி.11, பத்து ஏக்கரில் நாற்று நடப்பட்டு, மிகுதிக்கு 34 — 8 நெல் சேற்று விதைப்பு செய்யப்பட்டது. பலகை அடிப்பதற்கு உழவு மாடுகள் நேரகாலத்திற்குக் கிடைக்காததால் ஆட்களே, வயல்களை நிரவ வேண்டி ஏற்பட்டது. இந்த நேரத்தில் வீடுகளும் கட்டிக் கொடுக்க வேண்டி இருந்தது. இதனால் ஏற்பட்ட தாமதத்தால் மிகுதி வயல்கள் உழப்பட்டிருந்தும் நெல் விதைக்க முடியாமல் போய்விட்டது.. இருந்தும் கடந்த விளைச்சல் பி.ஜி.11: 600புசல்களும், 34 — 8: 600புசல்களும் ஆகும்.

காடு வெட்டப்பட்டிருந்த மேட்டு நிலத்தில் ,ஆறு ஏக்கர் மட்டப்படுத்தப்பட்டு மிளகாய், கௌப்பி போடப்பட்டது . கௌப்பி 400ரூத்தல் பெறப்பட்டது. ஒரு கிணறும் தோண்டப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தொழில்துறை: தொழில் துறையில் எருதி என்று பெயரிடப்பட்டுள்ள இயந்திரம் திட்ட அளவில் முடிவுபெற்று செயல் வடிவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த இயந்திரத்தின் நோக்கம் மிருக சக்தியைப் பயன்படுத்தி கிராமிய மட்டத்தில் தொழில்களை ஏற்படுத்துவதாகும். நெல் குத்துதல், தேங்காய் உரித்தல், நெசவு, தும்படித்தல், போன்ற குடிசைக் கைத்தொழில்களுக்கு மிருகசக்தியைப் பயன்படுத்த முயற்சிக்கப்படுகின்றது. சாதாரணமாக மிருகங்களால் வெளிப்படுத்தக் கூடிய நடக்கும் சக்தியைச் சுழலவைத்து ஒரு மோட்டார்போல அதை செயல்படுத்தும் சாதனங்களுக்கு பொருத்தி இயங்கவைக்க முயற்சிசெய்யப்படுகின்றது. எருதியின் நன்மை என்னவென்றால் மாடு ஒரேஇடத்தில் நின்றுகொண்டு நடந்துகொண்டிருக்கும். அதன் கழுத்தில் பொறுப்புக் கொடுத்துள்ள படியால் அது நின்று கொண்டே நடக்கும். பட்டி பின் நோக்கிச் செல்லும். இந்தப் பட்டி இரு உருளைகள் மீது ஓடிக்கொண்டிருக்கும். முனைகள் பொருத்தப்பட்டிருக்கும். பட்டி பின்நோக்கிச் செல்வதால் உருளைகள் உருளும். இந்த உருளையைக் கொண்டு சுழல் இயக்கம் பெறப்பட்டு மற்றைய சாதனங்களுக்குப் பொருத்தப்படுகின்றது.

நிர்வாகம்: பண்ணை நிர்வாகத்தில் வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் ஆண்களுக்கு மாதம் 150 ரூபாவும், பெண்களுக்கு மாதம் 100 ரூபாவும், இளைஞர்களுக்கு 150 ரூபாவும் பொருட்படியாக கொடுக்கப் படுகின்றது. அதாவது ஒரு குடும்பத்தில் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் வேலைசெய்தால் மாதம் 250ரூபாய்க்குப் பண்ணையில் உள்ள கடையில் பொருட்கள் வாங்கலாம். இத்தோடு ஊக்க பணமாக வேலை செய்யும் ஒவ்வொரு நாட்களுக்கும் ஆண்களுக்கு ஒன்றரைரூபாவும், பெண்களுக்கு ஒரு ரூபாவும் கொடுக்கப்படுகின்றது. இத்தோடு ஆறுமாதங்களுக்கு ஒருமுறை இலாபத்தைப் பகிர்ந்து எல்லோருக்கும் சமமாக அளிக்கப்படுகின்றது. பொருட்படியின் பொருட்கள் வாங்காமல் விடப்பட்ட மிகுதித் தொகையும் கையளிக்கப்படுகின்றது. ஏற்படும் சிறு தேவைகளுக்குக் கடன் வழங்கப்படுகின்றது. பண்ணைக்கு வந்தவர்கள் அனேகர் சொந்தநிலங்கள் வைத்து வயல் செய்தவர்கள். தனிப்பட்ட போக்கில் பலகாலமாக வாழ்ந்து வந்தவர்களாததால் முதலில் இவ்வாறான திட்டத்தில் ஈடுபடுவது கடினமானதாகத்தான் தென்பட்டது. நிலத்தைப் பகிர்ந்து துண்டு துண்டாகக் கொடுக்கவேண்டும் என்று குரல் எழுப்பப்பட்டது. வீடுகள் கட்டுவதற்கு தனித்தனியாக நிலம் தரவேண்டும் என்று கேட்கப்பட்டது. இவ்வாறான கேள்விகள் இப்போது இல்லாமல் போய்விட்டது மாத்திரமல்ல ஒன்றாக இருக்க விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இரண்டொரு குடும்பங்கள் தனித்து காடுவெட்டி இருக்க விரும்புவதாகக்கூறிக்கொண்டு பண்ணையை விட்டு போயும் சில நாட்களின் பின் மீண்டும் பண்ணைக்குத் திரும்பி வந்துள்ளனர். தற்போது குடும்பங்களிலிருந்து மூவர், இளைஞர்களிலிருந்து நால்வர் கொண்ட எழுவர் கமிட்டியினால் சகல தீர்மானங்களும் எடுக்கப்படுகின்றது. அடிக்கடி இளைஞர்களும், குடும்பங்களும் கூடி பண்ணையில் எழும் பல்வேறு பிரச்சனைகளையும் ஆராய்ந்து தெளிவுபடுத்திக் கொள்கிறார்கள். அயல் கிராமத்துடன் நல்ல உறவு நிலவி வருகின்றது.

காணியை வாங்கிக்கொள்வது நல்லது என்ற அபிப்பிராயம் ஏற்பட்டும் சில காரணங்களால் தொடர்ந்தும் தனியார் பெயரிலேயே காணியை வைத்துக்கொள்வது என்று செயற்குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. காணிச் சொந்தக்காரரான, திரு. அருளப்புவும் பண்ணையிலேயே இருந்து தனது நீண்டகால அனுபவங்களை இளைஞர்களுடனும், மக்களுடனும் பகிர்ந்து கொள்கிறார். இவருக்கு குத்தகையாக சிறுதொகை கொடுக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டிருந்தும் இதுவரைகாலமும் அவ்வாறான எந்தவித தொகையும் கொடுக்கப்படவில்லை. பண்ணையின் முன்னேற்றத்திற்குத் தொடர்ந்து உழைத்து வருகின்றார். காலப்போக்கில் 1980ம் ஆண்டு ஆரம்பத்துக்கு முன் காணி செயற்குழு நிர்வாகத்தின் பொதுவுடமையாக உரிமைப் படுத்தப்படும். சென்ற வருடத்தில் குளத்தில் வான்பாய்ந்ததால் மீனுக்குக் குறைவில்லை. சுமார் 1500றாத்தல் மீன் பிடிக்கப்பட்டு எல்லோருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. இதில் விரால், கணையன், வாளை போன்ற மீன்களே பெரும்பாலானவை. பண்ணையில் உள்ள மாட்டுப் பண்ணையில் ஆறு கறவைப்பசுக்கள் உள்ளன. பால் காலையில் விநியோகம் செய்யப்படுகின்றது. குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு கூடுதலாக வழங்கப்படுகின்றது. கோழி வளர்ப்பு தொடங்கப்பட்டுள்ளது. மாங்கன்றுகள் நடப்பட்டுள்ளன. கலாச்சார ரீதியில் பொதுமை மனப்பான்மை, பண்பாடு ஊக்குவிக்கப்படுகின்றது. உழவர் திருநாளாகிய பொங்கல் நாளன்று கலைவிழா கொண்டாடப் பட்டது. இவ்விழாவில் இளைஞர்கள் நாடகமும், சிறுவர்களின் பாட்டும், நடனமும் நடைபெற்றது. தொழிலாளர் தினமாகிய மே தினத்தன்று விளையாட்டுப் போட்டி வைக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. பண்ணை இளைஞர்கள் வெளி இடங்களில் நடைபெறும் கலை விழாக்களிலும் பங்கு பற்றியுள்ளனர். பண்ணைச் சிறுவர்கள் கன்னாட்டியிலுள்ள பாடசாலையில் கல்வி பெறுகின்றார்கள். சாயங்காலத்தில் →





இ — வ: 1. ஸ்கொட் நிறுவனத்தின் தலைவர் தமது ஈழப் பிரயாணத்தின்போது ஈழவர்கள் முதல் முயற்சியான கன்னாட்டி பண் அளித்துள்ளது. 2. காடுவெட்டி நிலம் திருத்தி களைபிடுங்கும் காட்சி. 3. பயிர்ச் செய்கை வளர்கிறது. 4. பண்ணையில் நல்ல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



→ இவர்களுடைய கல்விக்கு இளைஞர்கள் உதவி செய்கின்றனர். குடும்பங்களை கூட்டுறவு இயக்கங்களில் ஈடு படுத்திக் கொள்வதால் அவர்கள் மத்தியில் ஏற்படக்கூடிய தாழ்வு மனப் பான்மை முற்றாக தவிர்க்கப்படுகின்றது. இளைஞர்களும், குடும்பங் களும் அன்புடனேயே பழகிக் கொள்கின்றார்கள். பண்ணையில் உள்ளவர்களில் விவசாய நடைமுறையில் அநுபவம் வாய்ந்த வயது வந்தவர்களிடமிருந்து ஆலோசனைகள் பெறப்படுகின்றது. இளைஞர் கள் அடிக்கடி பண்ணையில் உள்ளவர்களின் பிரச்சனைகள் பற் றியும், பரவலாக தமிழ் மக்களின் பிரச்சனைகள் பற்றியும், கருத்தரங்குகள் நடத்துகின்றார்கள். இவற்றைப் பேச்சுடன் நிறுத் திக்கொள்ளாமல் செயற்படுத்தவும் முற்படுகின்றபடியால் நல்ல அனுபவம் பெறக் கூடியதாக இருக்கின்றது.

சுயநலப் பிரச்சனைகள் ஏற்பட்டால் அவை உடன்தீர்த்து வைக்கப்படுகின்றது. பாதகமானவைகள் சுட்டிக் காட்டப்பட்டு திருத்தப்படுகின்றது. உதாரணமாக காவல் நேரத்தில் வேட்டை யாடப்பட்ட பன்றி ஒன்றை வெளி இடத்தில் கொண்டு போய் விற்றுவிட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டது. இது உடன் விசா ரிக்கப்பட்டு உண்மையென்று கண்டதும், அவர்களுக்கு வழங்கப் பட்டு வந்த மீன் விநியோகம் நிறுத்தப்பட்டது. தங்கள் பிழையை உணர்ந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்குத் தொடர்ந்து மீன் விநியோகம் செய்யப்பட்டது. மீன் பிடிப்பதற்கு ஐவர் கொண்ட குழுக்களாகப் பிரித்து(GROUPS)பிரித்து விடப் பட்டனர். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு நாளைக்கு மீன்களைப் பிடித்து நிர்வாகத்திடம் ஒப்படைப்பர். நிர்வாகத்தினர் மீனைப் பகிர்ந்து எல்லோருக்கும் அளிப்பர். ஆயினும் மீன்பிடிப்பவர்கள் நல்ல மீன்களை எடுத்து கீறி கருவாடு போட்டுக்கொண்டதால் இம்முறை நிறுத்தப்பட்டு மீன்பிடிக்கும் வேலை முற்றாக இளைஞர் களிடம் ஒப்படைக்கப்பட்டது.

முதலீடு: பிரச்சனைகளும் இல்லாமலில்லை. பண்ணைக்கு அக திகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் 65,000 ரூபாய் கடனாக வழங்கியுள்ளனர். அரசாங்கத்திடமோ, வங்கிகளிடமோ இவ்வாறான திட்டங்களுக்கு உதவுவதற்கு சட்டங்கள் இல்லாததால் அவர்களி டமிருந்து உதவிகள் கோரப்படவில்லை. இக்கடனை நாங்கள் இன் னும் திருப்பிச் செலுத்தத் தொடங்கவில்லை. கடந்தவருட நெல் விளைச்சலால் பெறப்பட்ட தொகை 52,000 ரூபாயாகும்.

இப்பண்ணையின் முன்னேற்றத்தில் எதிர்பாராத தடை கடந்த அக்டோபரில் ஏற்பட்டது. பண்ணை இளைஞர்கள் பன்னி ரெண்டு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த செய்தியை அறிந்திருப்பீர்கள். காவ லில் இருந்து விடுதலை செய்யப்பட்ட இளைஞர்கள் சிலர் தொ டர்ந்து வைத்திய கண்காணிப்பில் இருக்கவேண்டிய நிலையில் உள்ளனர். காவலில் இருந்த சமயம் எங்களுக்கு ஆதரவு தெரி வித்த பலருக்கும் நன்றி கூற இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்த விரும்பும் அத்தோடு பண்ணை இளைஞர்களில் ஒருவர் பேராதனை வளாகத்திற்கும் இன்னொருவர் யாழ்ப்பாண வளா கத்திற்கும் அனுமதி பெற்றிருக்கின்றார்கள் என்பதையும் மகிழ்ச் சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். ஏனைய இளைஞர்களும், மற் றும் கூட்டுறவு நோக்குடன் இயங்கும் சிந்தனையை உடைய புது இளைஞர்களும் இணைந்து இப்பண்ணையைத் தொடர்ந்துநடத்தி வருகிறார்கள். இதன் பொறுப்பை விவசாய அபிவிருத்தித் துறை யில் பயிற்சி பெற்ற ஒரு நிபுணர் உட்பட முன்னர்போல் ஏழு பேர் கொண்ட கமிட்டியின் நிர்வாகத்தில் நடைபெறுகிறது.

இந்த நடப்பு வருடத்தில் பண்ணையின் முழு நில விஸ் திரணத்திலும் விவசாயம் மேற்கொள்வதுடன் இதை ஒரு உதா ரண சிறப்பு பொதுவுடமை பண்ணையாக(MODEL COM MUNE FARM)நடாத்த திட்டப் பரிமாணங்களை வகுத்துள் ளோம். இதற்கு லண்டனில் உள்ள ஸ்கொட் ஸ்தாபனம் குறிப் பிட்டளவு நிதி உதவி தர முன்வந்துள்ளது. அத்தோடு இது போல் மேலும் சிறப்பான பண்ணைகளை உருவாக்க இப்பண்ணையில் விவசாயப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருவதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறோம். இதற்கு நல்லெண்ணம் படைத்தோரின் ஆத ரவை நாடுகிறோம்!





ணைக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படம். 1978 — 79 நடப்புத்திட்டத்துக்கு ஸ்கொட் பொருளாதாரஉதவி
பாடங்கள் கற்பிக்கும் காட்சி. 5. உழவர் திருநாளில் உதய சூரிய[illegible]க்கு [illegible] விளக்கேற்றப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## Calendar 1978

| | January | February | March | April | May | June |
|---|---|---|---|---|---|---|
| Sun. | 1 8 15 22 29 | 5 12 19 26 | 5 12 19 26 | 30 2 9 16 23 | 7 14 21 28 | 4 11 18 25 |
| Mon. | 2 9 16 23 30 | 6 13 20 27 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 |
| Tues. | 3 10 17 24 31 | 7 14 21 28 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 |
| Wed. | 4 11 18 25 | 1 8 15 22 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 |
| Thurs. | 5 12 19 26 | 2 9 16 23 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 |
| Fri. | 6 13 20 27 | 3 10 17 24 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 |
| Sat. | 7 14 21 28 | 4 11 18 25 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 |

| | July | August | September | October | November | December |
|---|---|---|---|---|---|---|
| Sun. | 30 2 9 16 23 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 31 3 10 17 24 |
| Mon. | 31 3 10 17 24 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 |
| Tues. | 4 11 18 25 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 |
| Wed. | 5 12 19 26 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 |
| Thur. | 6 13 20 27 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 |
| Fri. | 7 14 21 28 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 |
| Sat. | 1 8 15 22 29 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 |

# 1979

## Calendar 1979

| | January | February | March | April | May | June |
|---|---|---|---|---|---|---|
| Sun. | 7 14 21 28 | 4 11 18 25 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 |
| Mon. | 1 8 15 22 29 | 5 12 19 26 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 |
| Tues. | 2 9 16 23 30 | 6 13 20 27 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 |
| Wed. | 3 10 17 24 31 | 7 14 21 28 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 |
| Thur. | 4 11 18 25 | 1 8 15 22 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 |
| Fri. | 5 12 19 26 | 2 9 16 23 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 |
| Sat. | 6 13 20 27 | 3 10 17 24 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 |

| | July | August | September | October | November | December |
|---|---|---|---|---|---|---|
| Sun. | 1 8 15 22 29 | 5 12 19 26 | 30 2 9 16 23 | 7 14 21 28 | 4 11 18 25 | 30 2 9 16 23 |
| Mon. | 2 9 16 23 30 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 31 3 10 17 24 |
| Tues. | 3 10 17 24 31 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 |
| Wed. | 4 11 18 25 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 |
| Thur. | 5 12 19 26 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 |
| Fri. | 6 13 20 27 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 |
| Sat. | 7 14 21 28 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 |

## Calendar 1980 (LEAP YEAR)

| | January | February | March | April | May | June |
|---|---|---|---|---|---|---|
| Sun. | 6 13 20 27 | 3 10 17 24 | 30 2 9 16 23 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 |
| Mon. | 7 14 21 28 | 4 11 18 25 | 31 3 10 17 24 | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 |
| Tues. | 1 8 15 22 29 | 5 12 19 26 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 |
| Wed. | 2 9 16 23 30 | 6 13 20 27 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 |
| Thur. | 3 10 17 24 31 | 7 14 21 28 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 |
| Fri. | 4 11 18 25 | 1 8 15 22 29 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 |
| Sat. | 5 12 19 26 | 2 9 16 23 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 |

| | July | August | September | October | November | December |
|---|---|---|---|---|---|---|
| Sun. | 6 13 20 27 | 31 3 10 17 24 | 7 14 21 28 | 5 12 19 26 | 30 2 9 16 23 | 7 14 21 28 |
| Mon. | 7 14 21 28 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 |
| Tues. | 1 8 15 22 29 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 |
| Wed. | 2 9 16 23 30 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 |
| Thur. | 3 10 17 24 31 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 |
| Fri. | 4 11 18 25 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 |
| Sat. | 5 12 19 26 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

PUBLISHED BY ECONOMIC RESEARCH ORGANISATION, LONDON.